**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

*Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Chithirai Thingal 09th day*

*Wednesday the 22nd day of April 2026*

**Calender Case No.98/2022**
**CNR No. TNPD01-001006-2022**

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | Ilayankudi P.S. in Cr.No. 324/2020 u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | 1) Mohamed Thaslim<br>2) John Mohamed |
| 4. | Father's Name /Husband Name | 1) Thulkarne Sickandar<br>2) Shajakhan |
| 5. | Occupation | 1) Coolie<br>2) Coolie |
| 6. | Residence | 1) Thakkattai Street, Ilayangudi.<br>2) Sooravali Street, Ilayangudi. |
| 7. | Age | 1) 35<br>2) 36 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 27.08.2020 |
| 9. | Complaint | 27.08.2020 |
| 10. | Apprehension | 1) 27.08.2020<br>2) 27.08.2020 |
| 11. | Release on bail | 1)16.09.2020<br>2) 16.09.2020 |
| 12. | Commitment | - |

| | | |
|---|---|---|
| 13. | Commencement of Trial | 30.08.2023 |
| 14. | closure of trial | 16.04.2026 |
| 15. | Sentence or order | 22.04.2026 |
| 16. | Service of copy of Judgment or finding on accused. | 22.04.2026 |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>1) 30.08.2023 - 30.08.2023<br>2) 12.06.2025 - 12.06.2025<br>3) 19.06.2025 - 19.06.2025<br>4) 14.10.2025 - 14.10.2025<br>5) 07.04.2026 - 07.04.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 16.04.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 1) 27.08.2020 - 16.09.2020<br>2) 27.08.2020 - 16.09.2020 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 12.05.2022 |

இவ்வழக்கு 16.04.2026-ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது

வழக்கறிஞர் திரு. எம். பாலசுப்பிரமணியன், M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G. மணிகண்டன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

## தீர்ப்புரை

கடந்த 27.08.2020–ம் தேதி இளையான்குடி தாலுக்கா கீழாயூர் காலனி காசீம் நகரில் பள்ளிவாசல் எதிரில் அமைந்துள்ள இவ்வழக்கில் சம்பவ இடத்தில் பூ விதை மற்றும் இளம்பச்சை கதிருடன் கூடிய ரூ.15,000/– மதிப்புள்ள 1.500 கிகி எடையுள்ள கஞ்சா என்னும் போதைப்பொருளை அரசின் எவ்வித அனுமதியின்றி சட்டவிரோதமாக சுயலாபம் கருதி விற்பனை செய்ய வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன்கீழ் இளையான்குடி காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிகளுக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், எதிரிகள் மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு

வனைந்து விளக்கி வினவ எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்கள்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு-</u>

(I) அசா.1 திரு.பாலசண்முகம் தனது சாட்சியத்தில் கடந்த 27.08.2020-ம் தேதி இளையான்குடி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது தானும், எஸ்.ஐ.பிரபாகரன், த.கா.முருகவேல், த.கா.விக்னேஷ்வரன் ஆகியோர் கஞ்சா ரோந்து அலுவலாக 14.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து புறப்பட்டு இளையான்குடி, கீழாயூர் காலணி, காசிம் நகர் கருவக்காட்டு பக்கம் ரோந்து சென்றபோது சந்தேகப்படியான 2 நபர்கள் கட்டை பையுடன் நின்றுக் கொண்டிருந்தவர்களை பிடிக்க முற்படும்போது ஓட முற்பட்டபோது பிடித்து விசாரித்தபோது முகமது தஸ்சிலிம், ஜான் முகமது என்று பெயர்கள் கூறினார்கள் என்றும், எதிரிகளாகிய உங்களிடம் உள்ள கட்டை பையில் கஞ்சா இருப்பது போல தங்களுக்கு தகவல் வந்துள்ளது என்றும், இதுசம்பந்தமாக உங்களை பரிசோதனை செய்ய நீதிபதியிடமோ, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்யலாமா என்று கேட்டதற்கு, அதற்கு அவர்கள் நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதன்பேரில், சோதனை சம்மத கடிதம் பெற்று தானும், முருகவேல் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும், அந்த சோதனை சம்மத கடிதம் அ.த.சா.ஆ.1 என்றும், எதிரிகள் வைத்திருந்த கட்டை பையை சோதனை செய்தபோது 6 கஞ்சா பொட்டலங்கள்

பிளாஸ்டிக் கவரினால் சுற்றப்பட்டு காக்கி டேப்பால் ஒட்டப்பட்டிருந்தது என்றும், அதை தாங்கள் கொண்டு சென்ற வில் தராசில் எடை போட்டு பார்த்தபோது 1.500 கிகி கஞ்சா இருந்தது என்றும், சட்டத்திற்கு புறம்பாக கஞ்சா விற்பனை செய்தற்காக கைது நமுனா 15.30 மணிக்கு தயார் செய்து, பொது மக்கள் யாரும் முன்வராததால் தானும், முருகவேல் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும், அந்த கைது நமுனா (எண்ணிக்கை-2) அ.த.சா.ஆ.2 என்றும், எதிரி தானாக 16.30 முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும், முருகவேல் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும், 17.30 மணிக்கு கைப்பற்றப்பட்ட கஞ்சாவில் இருந்து பகுப்பாய்விற்காக தலா 25 கிராம் வீதம் கட்டி, எஸ்.ஹெச்ஓ. சீல் வைத்தும், S1, S2 என குறியீடு செய்தும், மீதமுள்ள 1.450 கிராம் கஞ்சாவை P1 குறியீடு செய்தும், சார்பு ஆய்வாளர் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் தானும், முருகவேல் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும், கைப்பற்றுதல் மகஜர் கார்பன் நகல் அ.த.சா.ஆ.3 என்றும், 17.45 மணிக்கு கைப்பற்றப்பட்ட பொருள் மற்றும் எதிரிகளை நிலையம் கொண்டு சென்று பிரிவு 57-ன் படி சார்பு ஆய்வாளர் ஆய்வாளரிடம் கொடுத்து வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா.2 திரு.முருகவேல் தனது சாட்சியத்தில் கடந்த 27.08.2020 ம் தேதி தான் இளையான்குடி காவல் நிலையத்தில் 2-ம் நிலை காவலராக பணிபுரிந்து வந்தபோது அன்று மதியம் 14.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன், 2-ம் நிலை காவலர் விக்னேஷ் மற்றும் பாலசண்முகம் ஆகியோருடன் இளையான்குடி தாலுகா, கீழாயூர் காலணி, காசிம் நகர், பள்ளிவாசல் எதிரே கஞ்சா சோதனை செய்வதற்காக உரிய உபகரணங்களுடன் சென்றோம் என்றும், 14.30 மணிக்கு கீழாயூர் காலனி, காசிம்நகர் பள்ளிவாசல் எதிரே சென்றபோது அங்கு கையில் கட்டை

பையுடன் நின்ற ஒருவர் போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தணித்தவரை தாங்கள் பிடித்து விசாரணை செய்ததில், முன்னுக்கு பின் முரணாக கூறினார் என்றும், பின்பு விசாரணையில் இளையான்குடி தக்கட்டை தெருவை சேர்ந்த துல்கர்ணை சிக்கந்தர் சேர்ந்த முகமது தஷ்லிம் மற்றும் சூறாவளி தெரு சாஷகான் மகன் ஜான் முகமது என்றும் கூறினார் என்றும், உங்கள் கையில் வைத்திருக்கும் கட்டைப் பையில் கஞ்சா என்னும் போதை பொருள் இருப்பதாக தகவல் வந்துள்ளது என்றும், அது சம்பந்தமாக நீதிமன்ற நடுரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று அவர்கள் முன்னிலையில் எதிரியாகிய உங்களை சோதனையிட வேண்டுமென்று அவர்களது உரிமையை எடுத்து சொல்ல அதற்கு அவர்கள் தேவையில்லை காவல் துறை அதிகாரிகள் ஆகிய தாங்களே தங்களுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் சோதனை செய்யலாம் என்று சொன்னதன்பேரில் 15.00 மணிக்கு சோதனை சம்மத கடிதம் தயார் செய்து, அதில் அவர்களிடம் கையொப்பம் பெற்று அதில் சாட்சிகளாக காவலர் பாலசண்முகம் மற்றும் தான் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அதசாஆ.1 சோதனை சம்மத கடிதத்தில் உள்ள 2–வது சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்றும், முகமது தஷ்லிம் என்பவர் வைத்திருந்த கட்டைப் பையை சோதனை செய்தபோது பிளாஸ்டிக் பையில் காக்கி பேப்பரால் சுற்றப்பட்ட 6 பொட்டலங்கள் இருந்தது என்றும், அதை பிரித்து பார்த்தபோது பூ, இலை மற்றும் பச்சை கதிர்களுடன் கூடிய கஞ்சா எனும் போதை பொருள் இருந்தது என்றும், அதை தாங்கள் கொண்டு சென்ற வில் தராசில் எடை போட்டபோது மொத்தமாக 1.500 கிராம் எடை இருந்தது என்றும், அந்த இடத்தில் அரசு அனுமதியின்றி சுய

லாபம் கருதி விற்பனைக்காக கஞ்சா பொட்டலங்கள் வைத்திருந்தவர்களை கைது செய்வதற்காக 15.30 மணிக்கு கைது நமுனா முகமது தஷ்லிம் என்பவருக்கு தயார் செய்து அதில் எதிரியிடம் கையொப்பம் பெற்றும், சாட்சிகள் கையொப்பம் பெற்றோம் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.சா.ஆ.2 கைது அறிக்கையில் உள்ள 2–வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், 2–வது எதிரி ஜான் முகமது என்பவருக்கு கைது அறிக்கை தயார் செய்து, எதிரியிடம் கையொப்பம் பெற்றும், சாட்சிகள் கையொப்பம் பெற்றோம் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் கைது அறிக்கையில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும், ஜான் முகமதுவிற்கு பதிவு செய்யப்பட்ட கைது அறிக்கை அ.த.சா.ஆ.4 என்றும், அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் 16.30 மணிக்கு முகமது தஷ்லிம் என்பவர் எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசை வார்த்தைகள் இன்றி தாங்கள் விசாரிக்கும்போது தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் முதலில் எதிரி முகமது தஷ்லீம் என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும், பின்னர் சாட்சியாக தானும், பாலசண்முகமும் கையெழுத்து செய்தோம் என்றும், அந்த வாக்குமூலத்தில் கண்டுள்ள 2–வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அந்த வாக்குமூலத்தில் கண்டுள்ள தனது கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.5 என்றும், 16.45 மணிக்கு ஆய்வு நமுனா தயார் செய்து எதிரிகள் இருவருக்கும் உடம்பில் காயங்கள் இருக்கிறதா என்று சோதனை செய்தோம் என்றும், அவர்களது உடம்பில் காயங்கள் எதுவும் இல்லை என்றும், அதற்கான ஆய்வு நமுனாவை சார்பு ஆய்வாளர் பிரபாகரன் தயார் செய்தார் என்றும், அதில் சாட்சியாக தானும்,

பாலசண்முகமும் கையெழுத்து செய்தோம் என்றும், பின்னர் 17.15 மணிக்கு அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் அத்தாட்சி தயார் செய்து அதில் எதிரிகள் முகமது தஷ்லிம் மற்றும் ஜான் முகமது அவர்களிடம் கையொப்பம் பெற்று, சாட்சியாக தானும், பாலசண்முகமும் கையெழுத்து செய்தோம் என்றும், தன்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.சா.ஆ.3 உள்ள 2–வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சோதனைக்காக அதிலிருந்து தலா 25 கிராம் 2 மாதிரிகள் எடுத்தும், அதில் காக்கி பேப்பரில் வைத்து மடித்து, வெள்ளை நூலால் கட்டி போலீஸ் பட்டன் மற்றும் அரக்கு சீல் வைத்தும், அதற்கு S1, S2 என குறியீடு செய்தும் பின்பு 1.450 கிராம் கஞ்சாவை காக்கி பேப்பரில் வைத்து மடித்தும் வெள்ளை நூலால் சுற்றி போலீஸ் பட்டன் மற்றும் அரக்கு சீல் வைத்தோம் என்றும், அதற்கு P என சார்பு ஆய்வாளர் குறியீடு செய்தார் என்றும், பின்பு 17.45 மணிக்கு கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் இளையான்குடி காவல் நிலையம் வந்து சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன் பிரிவு 57 NDPS Act– ன் படி விரிவான அறிக்கையை ஆய்வாளரிடம் சமர்ப்பித்தார் என்றும், தாங்கள் சம்பவ இடத்தில் பார்த்து சோதனை செய்த 2 நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள் என்றும், அவர்கள் தான் முகமது தஷ்லிம், ஜான் முகமது ஆகியோர்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அசா.3 திரு.பொம்மையசாமி தனது சாட்சியத்தில் தான் தற்போது மதுரை மாவட்டம் குழந்தைகள் கடத்தல் குற்ற தடுப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், இதற்கு முன்பு 27.08.2020–ம் தேதி இளையாங்குடி காவல்நிலையத்தில் ஆய்வாளராக

பணிபுரிந்தபோது, சார்பு ஆய்வாளர் திரு.பிரபாகரன் காவல்நிலையத்தில் ஆஜராகி பிரிவு 57 NDPS–ன்படி தனியறிக்கை எதிரியிடம் கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் எதிரியுடன் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த அறிக்கையை பெற்று, குற்ற எண். 324/2020, சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B)–ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவை படிவம் 95–ன் மூலமாக இளையாங்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் காவல் அடைப்பிற்கு ஒப்படைத்தேன் என்றும், எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன் என்றும், சாட்சிகள் 2–ம்நிலை காவலர் திரு.விக்னேஷ், பாலசண்முகம், சார்பு ஆய்வாளர் பிரபாகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் தான் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டதால் தனக்கு பின்னால் வந்த காவல் ஆய்வாளரிடம் மேல்விசாரணைக்காக வழக்குகோப்பினை ஒப்படைத்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அசா.4 திரு.பிரபாகரன் தனது சாட்சியத்தில் கடந்த 27.08.2020–ம் தேதி இளையாங்குடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது மதியம் 14.00 மணிக்கு இரகசிய தகவலாளி கொடுத்த தகவலின் பேரில் 14.15 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்களிடம் தகவல் எழுத்துமூலமாக தெரிவித்தேன் என்றும், அது அ.த.சா.ஆ 7 என்றும், அவர்கள் உத்தரவின் பேரில் காவல் நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்து விட்டு இளையாங்குடி போலீஸ் இரண்டாம் நிலை காவலர்கள் முருகவேல், விக்னேஷ், பாலசண்முகம் ஆகியோர்களோடு வழக்கிற்கு தேவையாக உபகரணங்களுடன் 14.30 மணிக்கு இளையாங்குடி தாலுகா

கீழாயூர் காலணி காசிம் நகர் பள்ளிவாசல் எதிரில் உள்ள கரிவேலங்காட்டு பகுதிக்கு ரோந்து சென்ற போது அங்கு போலீஸ் பார்ட்டிகளாகிய தங்களை கண்டதும் கட்டைபையுடன் நின்று கொண்டிருந்த இரண்டு நபர்கள் ஓட எத்தனித்தவர்களை பிடித்து விசாரித்த போது முன்னுக்கு பின் முரணாக கூறி பின்பு இளையாங்குடி தக்கட்டை தெருவை சேர்ந்த துல்கருணை சிக்கந்தர் மகன் முகமது தஸ்லிம், இளையாங்குடி சூறாவளி தெருவை சேர்ந்த ஷாஜகான் மகன் ஜான் முகமது என்று கூறினார்கள் என்றும், அவர்களிடம் கட்டைப்பையில் கஞ்சா எனும் போதை பொருள் வைத்திருப்பதாக தங்களுக்கு தகவல் வந்துள்ளது என்றும், அதன் பேரில் தங்கள் இருவரையும் சோதனையிட வேண்டி அருகில் உள்ள நீதித்துறை நடுவர் அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரியின் முன்பு சோதனை இடுமாறு கோர எதிரிக்குள்ள உரிமையை எடுத்துக் கூறினேன் என்றும், அதற்கு எதிரி தன்னால் அங்கே எல்லாம் வர முடியாது என்றும் நீங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னார் என்றும், அதன் பேரில் சோதனை சம்மத கடிதம் 15.00 மணிக்கு தயார் செய்து அதில் எதிரிகள் இருவரிடமும் கையொப்பம் பெற்றேன் என்றும், முகமது தஸ்லிம்–வை சோதனை செய்ய அந்த கட்டைப்பையில் இருந்த பிளாஸ்டிக் பையில் 6 பொட்டலங்களாக இருந்ததை பிரித்து பார்த்த போது அதில் பூ, விதை, இலை, மற்றும் இளம்பச்சை கதிருடன் கூடிய கஞ்சா எனும் போதை பொருள் இருந்தது என்றும், அப்போது அங்கு தயாராக கொண்டு சென்ற வில் தராசில் எடைபோட்டு பார்த்த போது 1.500 கிராம் கஞ்சா இருந்தது என்றும், பின்பு 15.30 மணிக்கு அவர்கள் இருவரும் அரசின் எந்தவித அனுமதிஇன்றி கஞ்சா விற்ற குற்றத்திற்காக காரணம் கூறி கைது நமூனா தயார் செய்து அவர்கள் இருவரிடம் கையொப்பம் பெற்றேன் என்றும்,

அவர்களை கைது செய்து விசாரிக்க எதிரி முகமது தஸ்லிம் 16.30 மணிக்கு எந்த வித அச்சுறுத்தலோ மற்றும் துன்புறுத்தலோ ஆசை வார்த்தை இன்றி அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீஸ் சாட்சிகள் பாலசண்முகம், முருகவேல் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், 16.45 மணிக்கு ஆய்வு நமூனா தயார் செய்து அவர்களது உடலை பரிசோதனை செய்த போது எந்த வித காயமும் இல்லை என்று பதிவு செய்து அவர்கள் இருவரிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், பின்பு 17.15 மணிக்கு எதிரி முகமது தஸ்லிம் என்பவரிடமும் போலீஸ் சாட்சிகள் பாலசண்முகம், முருகவேல் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதில் ஆய்விற்காக மாதிரியாக தலா 25 கிராம் எடையுள்ள கஞ்சா வை இரண்டு பொட்டலங்களாக காக்கி நிற கவரில் மடித்து வெள்ளை நூலால் கட்டி போலீஸ் பட்டன் அரக்கு சீல் வைத்து அதில் S1, S2 என்று குறியீடு செய்தும் மீதமுள்ள 1.450 கிராம் கஞ்சா வை காக்கி நிற கவரில் மடித்து வெள்ளை நூலால் கட்டி போலீஸ் பட்டன் அரக்கு சீல் வைத்து அதில் P1 என்று குறியீடு செய்து அந்த மகஜரில் போலீஸ் சாட்சிகள் பாலசண்முகம் முருகவேல் ஆகியோரிடம் கையெப்பம் பெற்றேன் என்றும், பின்பு 17.45 மணிக்கு எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுடன் இளையாங்குடி காவல் நிலையத்திற்கு வந்து காவல் நிலைய ஆய்வாளர் அவர்களிடம் பிரிவு 57 NDPS Act ன்படி விரிவான அறிக்கை வழங்கினேன் என்றும், அந்த பிரிவு 57–ன் படியான விரிவான அறிக்கையை தான் ஆய்வாளர் அவர்களுக்கு சமர்பித்தேன் என்றும், அந்த அறிக்கை அ.த.சா.ஆ 8 என்றும், தான் கொடுத்த விரிவான அறிக்கையின் படி

காவல் ஆய்வாளர் அவர்கள் நிலைய குற்ற எண் 324/2020 பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act– ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அசா.5 திரு.அழகர் தனது சாட்சியத்தில் கடந்த 27.12.2021–ம் தேதி இளையான்குடி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது இளையான்குடி காவல் நிலைய குற்ற எண்.324/2020 என்ற வழக்கை தனது மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு இதற்கு முன் வழக்கை விசாரித்த உதவி ஆய்வாளர் திரு.பிரபாகரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்பு 11.01.2022–ம் தேதி த.கா.அழகுபூபதி என்பவரை நீதிமன்றத்திற்கு 11.01.2022–ம் தேதி RP.No.7/2022 எண் வழங்கப்பட்டு 21.01.2022ம் தேதி பகுப்பாய்விற்காக ராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்படைத்தேன் என்றும், இந்நீதிமன்றத்தில் படிவம் 95 மூலமாக இளையான்குடி நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன் என்றும், அந்த படிவம் 95 அதசாஆ.9 என்றும், கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களுக்கு நீதித்துறை நடுவர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்ட சொத்து விவரப்பட்டியல் Annexure I அதசாஆ. 10 என்றும், Annexure II அதசாஆ. 11 என்றும், நீதித்துறை நடுவர் அவர்கள் சான்றொப்பம் செய்த புகைப்படங்கள் வரிசை 2 அதசாஆ. 12 என்றும், பின்பு திரு.கோவிந்தராஜ்–யை விசாரித்து பின்பு அவர் வழங்கிய பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ.13 என்றும், Crlmp.No.723/2025 Dt.01.03.2025 என்ற எண்ணில் கைப்பற்றப்பட்ட தடய சொத்து மாதிரிகள் அழிப்பதற்கு இந்நீதிமன்ற உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், அந்த உத்தரவு அதசாஆ.14 என்றும், பின்பு எதிரி மீது

17.02.2022–ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரிகள் அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார்கள். எதிரிகள் தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, எதிரிகள் தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரிகள் மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரிகள் மீதான u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரிகள் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரிகளை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக முதல் நிலை காவலர் பாலசண்முகம் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா1ன் வழியாக அசாஆ 1 முதல் அசாஆ 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசா2 ஆக முதல் நிலை காவலர் முருகவேல் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வழியாக அசாஆ 4 மற்றும் அசாஆ 5 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா3 ஆக காவல் ஆய்வாளர் பொம்மையசாமி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 6 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அசா4 ஆக சார்பு ஆய்வாளர் பிரபாகரன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 7,8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா5 ஆக காவல் ஆய்வாளர் அழகர் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 9 முதல் 14 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

12. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள முதல் நிலை காவலர் பாலசண்முகத்தின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 27.08.2020 அன்று

இளையான்குடி காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது சார்பு ஆய்வாளர் தலைமையில் தானும் , தலைமை காவலர்கள் முருகவேல், விக்னேஸ்வரன் ஆகியோர்களுடன் ரோந்து அலுவலக 14.00 மணிக்கு இளையான்குடி கீழாயூர் காலனி காசீம்நகர் கருவக்காட்டு பக்கம் கண்காணித்தபோது அங்கிருந்த 2 நபர்கள் தங்களை கண்டதும் ஓட எத்தணித்தவர்களை மடக்கி பிடித்தும் அவர்களிடம் அவர்களை சோதனை செய்ய நீதிபதியிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து செல்லலாமா என சார்பு ஆய்வாளரிடம் கேட்டதாகவும் சார்பு ஆய்வாளர் சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும் சோதனை செய்ததாகவும், அந்த சோதனை சம்மத கடிதம் அசாஆ1 என்றும் அதில் தானும் கையொப்பம் செய்துள்ளதாகவும், எதிரிகள் வைத்திருந்த சட்டை பையை சோதனை செய்தபோது அதில் 6 பொட்டலங்களாக மொத்தம் 1.500 கிகி கஞ்சா இருந்தது என்றும், அதனை சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், எதிரிகளுக்கு கைது நமூனா கொடுத்தும் கைது செய்தும், 1–ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்ததாகவும், முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் சார்பு ஆய்வாளர் பிரபாகரன் சோதனை மேற்கொண்டும் NDPS சட்டப்பிரிவு 50–ன் பிரகாரம் சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும் எதிரிகளிடமிருந்து 1.500 கிகி கஞ்சாவை கைப்பற்றியுள்ளதும் தெரியவருகிறது.

13. மேலும், அசா2 முதல் நிலை காவலர் முருகவேலும் தன்னுடைய சாட்சியத்தில், நடந்த சோதனை குறித்தும் எதிரிகளை பிடித்தும் சோதனை செய்தும் எதிரிகள் விற்பனைக்கு வைத்திருந்த 1.500 கிகி கஞ்சாவை சார்பு

ஆய்வாளர் பிரபாகரன் தலைமையில் கைப்பற்றியும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது குறித்து அசா1–ன் சாட்சியத்திற்கு ஒத்துரைப்பாக அசா2 எதிரிகளை குற்றப்படுத்தி குறிப்பிட்டு சாட்சியம் முன்வைத்துள்ளது தெரியவருகிறது.

14. மேலும், அசா3 திரு.பொம்மையாசாமி காவல் ஆய்வாளர், அசா4 சார்பு ஆய்வாளர் பிரபாகரன் சோதனை மேற்கொண்டும் எதிரிகளையும் தடய சொத்தான 1.500 கிகி கஞ்சாவையும் காவல் நிலையம் கொண்டு வந்து ஆஜர் செய்ததை குறித்தும் அதன் தொடர்ச்சியாக எதிரிகள் மீது அசாஆ 6 முதல் தகவல் அறிக்கையின் பிரகாரம் இளையான் குடி காவல் நிலைய குற்ற எண்.324/2020–ன் பிரகாரம் NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) –ன் பிரகாரம் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தது குறித்து சாட்சியம் முன்வைத்துள்ளார்.

15. மேலும் அசா4 திரு. பிரபாகரன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் Raiding and Seizing Officer ஆவார். அவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் 27.08.2020–ம் தேதி தான் இளையான்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது தனக்கு கிடைத்த தகவலின்பேரில் அசா1, அசா2ன் உதவியுடன் 14.30 மணிக்கு இளையான்குடி தாலுக்கா கீழாயூர் காலனி காசீம்நகர் பள்ளி வாசல் எதிரில் உள்ள கருவேலன்காட்டு பகுதியில் ரோந்து செய்தபோது போலீஸ் பார்ட்டியாகிய தங்களை கண்டதும் ஓட எத்தணித்த இவ்வழக்கின் எதிரிகளை பிடித்தும் சோதனை செய்ய எதிரிகளுக்குள்ள உரிமைகளை எடுத்துக்கூறியும் அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என

கூறியதால் சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும், சோதனை செய்தும், அதில் 6 பொட்டலங்களாக மொத்தம் 1.500 கிகி கஞ்சாவை எதிரிகள் வைத்திருந்ததை கைப்பற்றியும் எதிரிகளுக்கு கைது நமூனா கொடுத்தும், 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், கைப்பற்றிய கஞ்சாவிலிருந்து மாதிரிக்கென பகுப்பாய்வுக்கு எடுத்தும் பின்னிட்டு, 17.45 மணிக்கு எதிரிகளையும் தடய சொத்தையும் காவல் நிலையம் கொண்டு வந்தும் காவல் ஆய்வாளர் பொம்மையாசாமி முன்புக்கு ஆஜர்படுத்தியது குறித்தும் அது வகைக்கு நடந்த சோதனை குறித்து NDPS சட்டப்பிரிவு 57 ன் படியான விரிவான அறிக்கை அசாஆ 8 ஐ ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்ததாகவும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ 7 தகவலை ஆய்வாளருக்கு அசா4 முறையாக தெரிவித்தும் , சம்பவ இடம் சென்றும் அசா1 மற்றும் அசா2 உதவியுடன் சம்பவ இடத்தில் இருந்த எதிரிகளை பிடித்தும் NDPS சட்டப்பிரிவு 50–ன் பிரகாரம் சோதனை செய்ய எதிரிகளுக்கு உள்ள உரிமைகளை எடுத்துக்கூறியும் சோதனை மேற்கொண்டும் எதிரிகளிடமிருந்து 1.500 கிகி கஞ்சாவை கைப்பற்றியுள்ளது அரசு தரப்பில் அசா1 முதல் 5 வரையிலான சாட்சிகளின் சாட்சியத்தின் பிரகாரம் ஒன்றுக்கொன்று ஒத்துரைக்கப்பட்டுள்ளது. அது வகைக்கு NDPS சட்டப்பிரிவு 42(1), 50 மற்றும் 57 ஆகிய சட்டப்பிரிவுகளை அசா4 முறையாக பின்பற்றி சோதனை மேற்கொண்டுள்ளது தெரியவருகிறது.

16. மேலும், இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள காவல் ஆய்வாளர் அழகரின் சாட்சியத்தினையும், அசாஆ 13 பகுப்பாய்வு அறிக்கையையும் மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா5 இவ்வழக்கின்

எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய 1.500 கிகி தாவர பொருள் கஞ்சா என்பது அரசு தரப்பில் அறிவியல் பூர்வமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

17. மேலும் அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சியத்தின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54–ன்பிரகாரம் எதிரிகள் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் 1.500 கிகி கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்தது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் NDPS சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் எதிரிகளால் முன்னிடப்பட்டிருக்கவில்லை.

**18.** மேலும், இவ்வழக்கில் எதிரிகள் தரப்பில் அசா3 காவல் ஆய்வாளர் பொம்மையாசாமியின் குறுக்கு விசாரணையின் போது குறியீடு செய்யப்பட்டுள்ள எமசாஆ 1 மற்றும் எமசாஆ 2 ஐ குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அதில் உள்ள 8 வது காலத்தில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் என்ற காலத்தில் ஒன்றும் எழுதப்படாமல் , பூர்த்தி செய்யப்படாமல் காலியாக உள்ளதாலேயே உண்மையில் எதிரிகள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து 1.500 கிகி கஞ்சாவை காவல் சார்பு ஆய்வாளர் அசா4 கைப்பற்றப்படவில்லை என்றும் கருத இயலாது. ஏனெனில், அசா1 மற்றும் அசா2 ன் முன்னிலையில் அசா4 தனக்கு வந்த தகவலை எழுத்து மூலமாக பதிவு செய்தும், சம்பவ இடம் சென்றும் அசா1 மற்றும் 2 ன் முன்னிலையில்

சம்பவ இடத்தில் வைத்து சம்பவ நேரத்தில் 1.500 கிகி கஞ்சாவை கைப்பற்றியுள்ளது அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

19. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் எதிரிகள் மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாத்து அரசு தரப்பில் அசா1 முதல் அசா5 சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அசாஆ1 முதல் அசாஆ14 வரையிலான சான்றவாணங்களின் பிரகாரமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

20. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் எதிரிகள் NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. ஆகவே எதிரிகள் சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளிகள் என்று முடிவு செய்து, எதிரிகளுக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து எதிரிகளிடம் வினவ, எதிரிகள் கீழ்கண்டவாறு கூறினார்கள்.

| |
|---|
| 1) எனது வயது 40 ஆகும். என்னை மன்னிக்க வேண்டும். |
| 2) எனது வயது 42 ஆகும். என்னை மன்னிக்க வேண்டும். |

ஆகவே, எதிரிகளின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2022–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் , எதிரிகள் தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார்கள் என்பதாலும் எதிரிகளின் கோரிக்கையினை ஏற்றும், எதிரிகளுக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

22. முடிவாக எதிரிகள் 1985–ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9–01 ச–பி 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 –ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் ,

1–ம் எதிரிக்கு 21 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/– விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும்,

2–ம் எதிரிக்கு 21 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/– விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும்,

எதிரிகள் ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428–ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

1 வது எதிரி 27.08.2020 முதல் 16.09.2020 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் .

2 வது எதிரி 27.08.2020 முதல் 16.09.2020 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் .

எதிரிகளுக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/−+ 10.000/− = 20,000/− ஆகும்.

23. இவ்வழக்கில் ஆர்பிஎண்.07/2022−ல் குறியீடு செய்யப்படாத கஞ்சாவை பொறுத்து இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026−ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22−ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.04.22 17:00:02 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**<u>சாட்சி பட்டியல்−</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்−</u>**

அ.சா.1 திரு. பாலசண்முகம்,முதல் நிலை காவலர்.

அ.சா.2 திரு. முருகவேல், மதல் நிலை காவலர்.

அ.சா.3 திரு. பொம்மையாசமி, காவல் ஆய்வாளர்.

அ.சா.4 திரு. பிரபாகரன், சார்பு ஆய்வாளர்.

அ.சா.5 திரு. அழகர், காவல்ஆய்வாளர்.

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>**

அ.சா.ஆ.1 – சோதனை சம்மத கடிதம்

அ.சா.ஆ.2 – கைதுநமூனா (2 எண்ணிக்கை)

அ.சா.ஆ.3 – கைப்பற்றுதல் மகசர்

அ.சா.ஆ.4 – கைது அறிக்கை.

அ.சா.ஆ.5 – ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2–வது சாட்சி கையொப்பம்

அ.சா.ஆ.6– முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.7 – தகவல்.

அ.சா.ஆ.8 – ச/பி 57–ன் படியான விரிவான அறிக்கை.

அ.சா.ஆ.9 – படிவம் 95

அ.சா.ஆ.10– Annexure I

அ.சா.ஆ.11– Annexure II

அ.சா.ஆ.12– புகைப்படங்கள் (வரிசை 2)

அ.சா.ஆ.13– பகுப்பாய்வு அறிக்கை

அ.சா.ஆ.14– Crmlp No.723/2025 Dt.01.03.2025–ன் உத்தரவு

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u>** – இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்–</u>** இல்லை.

**<u>எதிரிகள்தரப்பு சான்றாவணம் –</u>**

எமசாஆ 1 1–ம் எதிரியின் கைது இன்டிமேசன்.

எமசாஆ 2 2–ம் எதிரியின் கைது இன்டிமேசன்.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.04.22 17:00:21 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் உள்ளனர்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. எதிரிகளுக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft
Judgment in C.C.98/2022
Dt.22.04.2026.